# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1720/7 - 2011 අගෝස්තු 24 වැනි බදාදා - 2011.08.24

*1720/7 ஆம் இலக்கம் - 2011 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 24 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி IV (அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

### வடமேல் மாகாண மாகாண சபை

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, மாகாண சபைகள் (இடைநேர்விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 185 ஆம் பிரிவின் கீழ் நடாத்தப்படுகின்ற விசாரணை*

வடமேல் மாகாணத்தின் மாகாண சபையின் முதலமைச்சரும் உள்ளூராட்சி மன்ற விடயப் பொறுப்புடைய அமைச்சருமான விஜேசிங்ஹ ஹெட்டி அச்சி முதியன்சேலாகே அதுல சரத் குமார விஜேசிங்ஹ ஆகிய நான், 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, மாகாண சபைகள் (இடைநேர்விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 185 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள சட்டதிட்டங்களுக்கு ஒழுங்கமைய எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி கீழ் காணப்படும் காரணம்/குற்றத்திற்காக மஹவ பிரதேச சபையின் தலைவர் திரு. சேனாநாயக்க முதியன்சேலாகே பந்துல புஸ்பகுமார சேனாநாயக அவர்களினால் தலைவராக இருக்கையில் மேற்கூறப்பட்ட சட்டத்தின் 185 ஆம் பிரிவின் கீழ் காணப்படும் குற்றங்கள் செய்துள்ளாரா என்பது பற்றி பரிசீலித்து 3 மாதத்தினுள் அறிக்கை சமர்ப்பிக்கும் வண்ணம் தனியாள் பரிசீலனை ஆணைக்குழுவாக ஓய்வு பெற்ற மேல் நீதிமன்ற நீதிவான் O. W. O. B. வீரசேன அவர்களை இத்தால் நியமிக்கின்றேன்.

பரிசீலிக்க வேண்டிய காரணம்/குற்றம் :

குற்றங்கள் :-

1. 2011, ஏப்பிறல் 01 ஆந் திகதி தொடக்கம் அல்லது அதற்கு அண்மித்த திகதியிலிருந்து மஹவ பிரதேச சபையின் தலைவராக இருக்கையில் 2011.06.23 ஆந் திகதி அல்லது அதற்கு அண்மித்த திகதியில் மஹவ பிரதேச சபை அதிகாரப் பிரிவிற்குட்பட்ட பிரதேசத்தில் வீதி விளக்கு புனரமைப்பதற்காக வீதி விளக்கு உபகரணம் வழங்குவதற்காக மஹவ பிரதேச சபையின் முறையான சட்டத் திட்டங்களுக்கு புறம்பாக 624 வவுச்சர் பத்திரம் மூலம் இலக்கம் 68, மெலிபன் வீதி, கொழும்பு - 11, சேசத் இலெக்ரிக் கம்பனி நிறுவனத்திற்கு மஹவ பிரதேச சபை பொது நிதியில் இருந்த 46,275 ரூபா தொகையை அல்லது அதற்கு அண்மித்த தொகையை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்ததனால் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 185 (1) (அ) மற்றும்/அல்லது 185 (1) (ஆ) மற்றும்/அல்லது 185 (1) (இ) பிரிவு/பிரிவுகளில் குறிப்பிடப்பட்ட குற்றம்/குற்றங்கள் செய்தல்.

2. 2011, ஏப்பிறல் 01 ஆந் திகதி தொடக்கம் அல்லது அதற்கு அண்மித்த திகதி தொடக்கம் இதுகால வரை மஹவ பிரதேச சபையின தலைவராக இருக்கையில் 2011.06.26 ஆந் திகதி அல்லது அதற்கு அண்மித்த திகதியில் மஹவ பிரதேச சபை முகாமைத்துவ உதவியாளர்/வேலைபார்க்கும் செயலாளர் ஐ. எம். சுவர்ணதிலகா என்பவரின் கடமைக்கு இடையூறு ஏற்படும் வகையில் செயல்படுதல் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 185 (1) (அ) மற்றும்/அல்லது 185 (1) (ஆ) மற்றும்/அல்லது 185 (1) (இ) பிரிவு/பிரிவுகளில் குறிப்பிடப்பட்ட குற்றம்/குற்றங்கள் செய்தல்.

3. 2011, ஏப்பிறல் 01 ஆந் திகதி தொடக்கம் அல்லது அதற்கு அண்மித்த திகதி தொடக்கம் மஹவ பிரதேச சபையின் தலைவராக இருக்கையில் 2011.07.26 ஆந் திகதி அல்லது அதற்கு அண்மித்த திகதி வரை மஹவ பிரதேச சபையின் முகாமைத்துவ உதவியாளர்/வேலைபார்க்கும் செயலாளர் ஐ. எம். சுவர்ணதிலகா என்பவருக்கு 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 219 (i) ஆம் பிரிவின் கீழ் வருகின்ற நிதி தொடர்பாக பிரதேச சபை பொது நிதியில் செலுத்துவதற்கு ஆரம்ப தேவைகளை பூர்த்தி செய்யாமல் இருக்கையில் கட்டளை இட்டு 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 185 (1) (அ) மற்றும்/அல்லது 185 (1) (ஆ) மற்றும்/அல்லது 185 (1) (இ) பிரிவு/பிரிவுகளில் குறிப்பிடப்பட்ட குற்றம்/குற்றங்கள் செய்தல்.

*4. 2011, ஏப்பிறல் 01 ஆந் திகதி தொடக்கம் அல்லது அதற்கு அண்மித்த திகதி தொடக்கம் மஹவ பிரதேச சபையின் தலைவராக இருக்கையில் மஹவ பிரதேச சபையின் அதிகாரப் பிரிவில் வீதி விளக்கு புனரமைப்பதற்காக மின் பண்டல் கேபல் 100 வழங்குவதற்காக சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10 கொலனியல் இலெக்ரிகல் இக்விஜ்மன்ட் நிறுவனத்தினால் 29,500 ரூபா பில் பத்திரம் மஹவ பிரதேச சபையின் தலைவரின் பெயரிற்கு கொடுக்கப்பட்டிருக்கையில் கொலனியல் இலெக்ரிகல் இக்விஜ்மன்ட் நிறுவனத்திற்கு மஹவ பிரதேச சபை பொது நிதியில் இருந்து செலுத்தாமல் மஹவ பிரதேச சபையின் சாரதி கே. எம். அருண புஸ்பகுமார என்பவருக்கு 2011.04.26 ஆந் திகதி அல்லது அதற்கு அண்மித்த திகதியில் 436 ஆம் இலக்க வவுச்சரினால் 29,500 ரூபா தொகை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்ததனால் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 185 (1) (அ) மற்றும்/அல்லது 185 (1) (ஆ) மற்றும்/அல்லது 185 (1) (இ) பிரிவு/பிரிவுகளில் குறிப்பிடப்பட்ட குற்றம்/குற்றங்கள் செய்தல்.*

*5. நீங்கள், 2011, ஏப்பிறல் 01 ஆந் திகதி தொடக்கம் அல்லது அதற்கு அண்மித்த திகதி தொடக்கம் மஹவ பிரதேச சபையின் தலைவராக இருக்கையில் 2011.07.13 ஆந் திகதி அல்லது அதற்கு அண்மித்த திகதியில் மஹவ பிரதேச சபையின் அதிகாரப் பிரிவிற்குட்பட்ட பிரதேசத்தில் வீதி விளக்கு புனரமைப்பதற்காக வீதி விளக்கு உபகரணம் வழங்குவதற்காக மஹவ பிரதேச சபையின் முறையான சட்ட திட்டங்களுக்கு புறம்பாக 624 வவுச்சர் பத்திரம் மூலம் இலக்கம் 68, மெலிபன் வீதி, கொழும்பு - 11 சேசத் இலெக்ரிக் கம்பனி நிறுவனத்திற்கு 1,43,850 ரூபா தொகையை அல்லது அதற்கு அண்மித்த தொகையொன்றைச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்ததனால் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 174 ஆம் பிரிவிற்கு நேர்மாறாக நடவடிக்கை எடுத்ததினால் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 185 (1) (அ) மற்றும்/அல்லது 185 (1) (ஆ) மற்றும்/அல்லது 185 (1) (இ) பிரிவு/பிரிவுகளில் குறிப்பிடப்பட்ட குற்றம்/குற்றங்கள் செய்தல்.*

*6. நீங்கள், 2011, ஏப்பிறல் 01 ஆந் திகதி தொடக்கம் அல்லது அதற்கு அண்மித்த திகதியொன்று தொடக்கம் மஹவ பிரதேச சபையின் தலைவராக இருக்கையில் 2011.07.13 ஆந் திகதி அல்லது அதற்கு அண்மித்த திகதியில் மஹவ பிரதேச சபையின் அதிகாரப் பிரிவிற்குட்பட்ட பிரதேசத்தில் வீதி விளக்கு புனரமைப்பதற்காக வீதி விளக்கு உபகரணம் வழங்குவதற்காக மஹவ பிரதேச சபையின் முறையான சட்ட திட்டங்களுக்கு புறம்பாக 741, 742, 743 மற்றும் 744 வவுச்சர் பத்திரங்கள் மூலம் இலக்கம் 68, மெலிபன் வீதி, கொழும்பு - 11 சேசத் இலெக்ரிக் கம்பனி நிறுவனத்திற்கு 1,43,850 ரூபா தொகையை அல்லது அதற்கு அண்மித்த தொகையொன்றை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்ததனால் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 174 ஆம் பிரிவிற்கு நேர்மாறாக நடவடிக்கை எடுத்ததினால் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 185 (1) (அ) மற்றும்/அல்லது 185 (1) (ஆ) மற்றும்/அல்லது 185 (1) (இ) பிரிவு/பிரிவுகளில் குறிப்பிடப்பட்ட குற்றம்/குற்றங்கள் செய்தல்.*

*மேலும் 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர் விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் இரண்டாம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 185 ஆம் பிரிவில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ள சட்டத்தின்படி பரிசீலனை ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட ஆணையாளருக்குரிய அதிகாரப்படி இந்த பரிசீலனைக்காக ஓய்வுபெற்ற நீதியரசர் O. W. O. B. வீரசேன அவர்களுக்கு உரிமையாவதுடன் இந்த நியமனத் திகதி தொடக்கம் மூன்று மாத காலத்தினுள் பரீசீலனையை முடித்து, பரீசீலனையின் தீர்மானம் உட்பட்ட அறிக்கையை என்னிடத்தில் சமர்ப்பிக்குமாறு தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.*

*மேற்கூறப்பட்டவற்றை பரிசீலிக்கும் போது உரித்தாக்கிக் கொள்ள வேண்டிய எழுத்து மூல சாட்சி மற்றும் வாய்மூல சாட்சி, கீழ் உள்ள அட்டவணையில் உட்படுத்தப்பட்டுள்ளது என்று மேலும் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.*

*அதுல சரத் குமார விஜேசிங்ஹ,*
*வடமேல் மகாணத்தின் முதலமைச்சரும் நிதி மற்றும்*
*திட்டமிடல், நீதி, சமாதானம், உள்ளூராட்சி மற்றும்*
*மாகாண நிர்வாக, மனிதவள, கல்வியும் கலாசார நடவடிக்கையும்,*
*காணி, சூழல், சுற்றுலா, முதலீடு, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும்*
*உணவு வழங்கல் அமைச்சரும்.*
*வட மேல் மாகாண மாகாண சபை.*

*முதலமைச்சு அலுவலகம்,*
*குருநாகல்,*
*2011, ஓகத்து 23.*

**அட்டவணை**

(அ) வாய்மொழிமூல சாட்சி :

(i) களஞ்சிய பொறுப்பாளர் திருமதி டீ. எம். பாக்கியா மதுபானி திசாநாயக்க , பிரதேச சபை, மஹவ.
(ii) மின் தொழில்நுட்பவியலாளர், திரு. ஆர். எம். செனரத் பண்டார, பிரதேச சபை, மஹவ .
(iii) பிரதேச செயலாளர், திரு. ஆர். எம். வன்னிநாயக, (2011.01.06 ஆந் திகதி தொடக்கம் 2011.04.01 ஆந் திகதி பிரதேச சபையின் அதிகாரம் உடைய உத்தியோகத்தராக கடமையாற்றிய) பிரதேச செயலாளர் அலுவலகம், மஹவ.
(iv) முகாமைத்துவ உதவியாளர் திருமதி ஐ. எம். சுவர்ணதிலகா, பிரதேச சபை, மஹவ.
(v) உள்ளூராட்சி உத்தியோகத்தர் (நிதி) திருமதி கல்யாணி சமன்லதா, பிரதேச சபை, மஹவ.
(vi) உள்ளூராட்சி உத்தியோகத்தர் (நிதி) திருமதி என். ஆர். ஏ. பி. வன்னிநாயக, பிரதேச சபை, மஹவ .
(vii) நிர்வாக உத்தியோகத்தர், திரு. டபிள்யூ. தந்திரிகம, ஆயுர்வேத திணைக்களம், குருநாகல்.
(viii) முகாமைத்துவ உதவியாளர், திருமதி எச். விஜேதுங்க, பிரதேச சபை, பொல்பிதிகம.
(ix) பிரதான முகாமைத்துவ உதவியாளர், திருமதி ஆர். எம். ரத்நாயக மெனிகே, உள்ளூராட்சி திணைக்களம், குருநாகல்.
(x) பாதைகள் தொழிலாளர், திரு. டீ. எம். திசாநாயக, பிரதேச சபை, மஹவ.
(xi) வேலைப்பார்க்கும் செயலாளர், திரு. வை. எம். சேனாநாயக, பிரதேச சபை, மஹவ.
(xii) பாதைகள் தொழிலாளர், திரு. ஜே. ஏ. பியசேன, பிரதேச சபை, மஹவ.
(xiii) நிலைய பொறுப்பாளர், பொலிஸ் நிலையம், மஹவ.
(xiv) மாவட்ட வைத்திய உத்தியோகத்தர், மாவட்ட வைத்தியசாலை, மஹவ.
(xv) பணிப்பாளர், கற்பித்தல் வைத்தியசாலை, குருநாகல்.
(xvi) திரு. டபிள்யூ. பி. பீ. திலகரத்ன, வேலைத்திட்ட உதவியாளர், (வருமான மேம்பாடு), பிரதேச சபை, மஹவ.
(xvii) திரு. ஆர். ஐ. பீ. எஸ். பீ. ரத்னமலல, முகாமைத்துவ உதவியாளர், பிரதேச சபை, மஹவ.
(xviii) திரு. ஆர். எம். ரத்நாயக, அமைய வருமான நிர்வாகத்தர், பிரதேச சபை, மஹவ.
(xix) சாரதி, திரு. கே. எம். அருண புஸ்பகுமார, பிரதேச சபை, மஹவ.
(xx) முகாமையாளர், மக்கள் வங்கி, மஹவ.

(ஆ) எழுத்துமூல சாட்சி :

(i) 2011.03.01 ஆந் திகதி கேள்வி அறிவித்தல் அறிக்கை.
(ii) 2011.01.27 ஆந் திகதி அதிகாரமுள்ள உத்தியோகத்தர்களின் கேள்விக் குழுவை நியமிக்கும் கடிதம்.
(iii) 2011.03.15 ஆந் திகதி ம/பி/ச/2/1/பொது விதிப்பு.
(iv) 2011.04.28 ஆந் திகதி ம/பி/ச/2/1/பொது விதிப்பு.
(v) மஹவ பிரதேச சபையின் பஸ் தரிப்பிடத்தை கட்டமைத்தல் II மற்றும் III ஆம் கட்டங்களை கட்டமைக்கும் கோவை.
(vi) மஹவ பிரதேச சபையின் கல், மணல், பொரலு (செம்மண்) கோவை.
(vii) வீதி விளக்கு உபகரணங்கள் களஞ்சிய கிடைப்பனவு புத்தகம் (2051 தொடக்கம் 2100 வரை).
(viii) வீதி விளக்கு உபகரணங்கள் வழங்கும் கட்டளைப் புத்தகம் (2351 தொடக்கம் 2400 வரை)
(ix) மஹவ பஸ் தரிப்பிடத்திற்காக மஹவ பிரதேசத்திற்கு மஹவ நீதிவான் நீதிமன்றத்தினால் பிரதேச சபையின் தலைவர் பெயருக்கு மணல் வழங்கிய மஹவ ம. உ/மணல் (அரசுடமை செய்யப்பட்ட) கடிதமும் ம. தி. அ. வழக்கு பொருள் கடிதம்.
(x) மஹவ பிரதேச சபையில் முகாமைத்துவ உதவியாளர் வேலைபார்த்த செயலாளர் திருமதி ஐ. எம். சுவர்ணதிலகா வின் அறிக்கை.
(xi) 2011.07.26 ஆந் திகதி மஹவ பிரதேச சபையின் தலைவரினால் உள்ளூராட்சி மன்றத் திணைக்களத்தின் பிரதான முகாமைத்துவ உதவியாளர் திருமதி ஆர். எம். ரத்நாயகவிற்கு பெற்றுக் கொடுத்த தொலைபேசி அழைப்பை குறிப்பு எழுதிய கடிதம்.
(xii) 2011.06.23 ஆந் திகதிய 624 ஆம் வவுச்சரும் அதற்கு உரிய இணைப்பும்.
(xiii) 2011 வீதி விளக்கு உபகரண கடிதகோவை.
(xiv) 2011.07.13 ஆந் திகதி இலக்கம் 741, 742, 743, 744 க்கான கொடுப்பனவு வவுச்சரும் அதற்கு உரிய விதிப்பு.
(xv) 2011.07.13 ஆந் திகதி இலக்கம் 741, 742, 743, 744 க்கான கொடுப்பனவு வவுச்சரும் அதற்காக மஹவ பிரதேச சபையினால் வழங்கப்பட்ட 019838 கிற்கான காசோலையின் பிரதி.
(xvi) 2011.07.27 ஆந் திகதி திருமதி ஐ. எம். சுவர்ணதிலகாவிற்கு கடமைக்கு இடையூறு செய்தது பற்றி திணைக்களப் பரிசீலனைக்கு உரிய வாய் மொழியும் அறிக்கையும்.
(xvii) 2011.04.26 ஆந் திகதி வவுச்சர் இலக்கம் 436 மற்றும் அதற்கு உரிய விதிப்பு.
(xviii) கொலோனியல் இலெக்ரிகல் இக்விப்மன்ட் நிறுவனத்தின் 29,500 ரூபா திகதியற்ற பில்பத்திரம்.
(xix) இலக்கம் 012951 கிற்கான காசோலையின் போட்டோ பிரதியும் அந்த காசோலையின் பிரதியும்.
(xx) அதிகாரமுள்ள உத்தியோகத்தர் நியமித்தல் சம்பந்தமாக, 2011.01.06 ஆந் திகதிய 1687/41 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் (அதி விசேட) வர்த்தமானி.

9- 217

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.